# அன்னை தெரேசா காவியத்தில் வாழ்வியல் அறம்

*முனைவர் இ. ஆக்னஸ் மேரி,* M.A.,M.Phil., M.Ed., P.hD., DCA..
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
தூய வளனார் கலை மற்றும் அறிவியல்கல்லூரி (தன்னாட்சி), கடலூர்

மலர்: 11

சிறப்பிதழ்: 2

மாதம்: ஜூலை

வருடம்: 2023

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v11iS2i1-July.6412

## முன்னுரை

**கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு**
**முன்தோன்றிய மூத்தக்குடி தமிழ்குடி**
**(புறப்பொருள்வெண்பா மாலை)**

உலக மொழிகளுக்கெல்லாம் மூத்த மொழி நம் தமிழ் மொழி. சங்க காலத்திற்கு முன்பே யவணர்கள் தமிழகத்தில் வாணிப உறவு கொண்டிருந்தனர். இதைத் தொடர்ந்து இசுலாமியர்கள், போர்ச்சுக்கள், டச்சுக்காரர்கள் ஆங்கிலேயர்கள் என பல நாட்டவரும் வாணிபத்திற்காக நம் நாட்டுடன் வாணிப உறவு கொண்டிருந்தனர். இவர்களில் முக்கிய மாணவர்கள் ஆங்கிலேயர்கள். இவர்கள் வாணிபத்தோடு தங்களுடைய சமயத்தையும் பரப்ப முற்பட்டார்கள். அதற்காக தங்களுடன் கிறித்துவ பாதிரிமார்களையும் அழைத்து வந்தார்கள். அந்த பாதிரிமார்கள் தங்களுடைய மதங்களைப் பரப்ப முக்கியமாக மொழி தேவை என்பதை உணர்ந்து தமிழை நன்கு கற்றுத்தேர்ந்தார்கள். மேலும் பைந்தமிழின் இனிமையை சுவைத்து மகிழ்ந்து தமிழுக்காகத் தமிழ்த் தொண்டு செய்யத் தொடங்கி விட்டார்கள். ஐரோப்பியர்களின் வருகையால், மதங்களை பரப்ப வந்தவர்கள் மத்தியில் மனிதர்களைத் தேடி, புறக்கணிக்கப்பட்ட கடைக்கோடி மக்களைத் தேடித் தன்னையும் அர்பணிக்க வந்த கிறித்துவ கன்னியாஸ்திரிகளில் ஒருவர்தான் அன்னை தெரசா என அழைக்கப்படும் ஆக்னஸ் .தான் ஒரு கிறித்தவள் என்பதை மட்டும் அடையாளமாக்கிக் கொண்டு மதம், இனம், மொழி, ஏழை, பணக்காரன், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பாகுபாடு பார்க்காமல் தன் வாழ்நாளை அர்பணித்து “புனிதர்” என்ற நிலையைப் பெற்றார். இந்த ஆக்னஸ் என்ற புனித அன்னை தெரேசாவின் வாழ்க்கையை எழுத்தாளர் சேவியர் என்பவர் தெரேசாவின் காவியம் என்னும் தலைப்பில் அன்னை தெரேசாவின் வாழ்க்கை வரலாற்றை கவிதை நடையில் படைத்துள்ளார். இந்தக் கட்டுரையானது அன்னை தெரேசாவின் காவியத்தில் வாழ்வியல் அறம் என்ற தலைப்பில் ஆராயப்பட உள்ளது. அவர்கள் வாழ்க்கையே முழுவதுமே அறவாழ்க்கை தான் அவற்றில் சிலவற்றைப் பிரித்து இந்தக் கட்டுரையில் காட்டப்பட்டுள்ளது.

## நட்பு அறம்

**நாடாது நட்டலின் கேடு இல்லை நட்டபின்**
**வீடில்லை நட்பு ஆள்பவர்க்கு குறள்-792**

ஒருவன் தன் வாழ்க்கையில் நண்பனை தேர்ந்து தெடுப்பது எப்படி, அப்படி தேர்ந்த பின் என்ன நிகழும் என்பதை இந்தக் குறளில் குறிப்பிட்டுள்ளார் வள்ளுவர். அதாவது நன்றாக ஆராயமல் நட்பு கொள்ளக்கூடாது அப்படி ஆராயமல் நட்பு கொண்டு பின்பு அந்த நட்பிலிருந்து விலகுதல் என்பது எவ்வளவு பெரிய துன்பம் என்று கூறுகிறார். இந்த நிகழ்வை அன்னைதெரேசாவின் வாழ்வில் ஏற்பட்ட நிகழ்வோடு காணலாம்.

ஒரு முறை ஆக்னஸின் நண்பர்கள் கூட்டத்தில் ஒரு தீய சிந்தனையுள்ள தோழி ஒருத்தி இருப்பதை அவருடைய தாயார் பார்த்து விட்டார். அந்த நபரோடு நட்பு கொண்டால் என்ன நடக்கும் என்பதை தன் மகளுக்குப் புரிய வைக்க ஒரு நடைமுறை விளக்கம் கொடுத்தாள். ஆக்னஸின் அன்னை அவளை அழைத்தாள் ஆக்னஸ் அங்கு வந்து மழையைக் கண்ட மயிலைப் போல அவள் கண்கள் விரிந்தன. அவளுக்கு முன்னால் ஒரு கூடை நிறைய ஆப்பிள் பழங்கள் பள பளத்தன. அன்னையின் கையில் ஓர் அழுகிய பழம், அன்னை அந்த அழுகியப் பழத்தை நல்ல பழங்கள் உள்ள அந்த கூடையின் பழங்களுக்கு நடுவே வைத்தாள். ஆக்னஸ் குழம்பினாள். பூ மாலையை எவராவது கருவாட்டுக் கூடையில் வைத்துக் கட்டுவார்களா? கெட்டதை எடுத்து எறிந்து விடலாமே. ஆனால் அந்தத் தாய் என்ன சொல்ல வருகிறாள் என்று குழம்பி நின்றாள். இந்த பழக்கூடையை உன்அறையில் பாதுகாப்பாக வைத்திரு நான் சொல்லும் வரையில் இதை திறந்து பார்க்கக்கூடாது என்றாள். ஆக்னஸ் அன்னை சொல் தட்டாதப் பெண் எனவே தன்அன்னை சொல்லும் வரை அந்தப் பழக் கூடையை திறந்து பார்க்கவில்லை. சில நாட்கள் கழித்து அன்னை தன் மகள் ஆக்னஸை அழைத்து அந்தக் கூடையை திறந்து பார் என்றாள். ஆக்னஸ் அதை திறந்து பார்த்தாள். கூடையில் உள்ள அனைத்துப் பழங்களும் அழுகிய நிலையில் இருந்தது. அனைத்துப் பழங்களும் வெளியே கொட்டப் பட்டது. ஆக்னஸின் தாய் மெதுவாக பேசத் தொடங்கினால். ஒரு கெட்டுப்போன ஆப்பில் ஒரு கூடை ஆப்பிளையும் கெட்டுப்போக வைத்து விட்டது. ஆனால் ஒரு கூடை ஆப்பிள்களும் சேர்ந்து ஒரு ஆப்பிளை நல்ல ஆப்பிளாக மாற்ற முடியவில்லை. இப்படித் தான் நட்பு என்பது தீய நட்பானது தூய உள்ளங்களையும் கீழ்த்தரமானதாக்கிவிடும். எனவே நட்பை தெரிந்தெடுப்பதில் கவனம் வேண்டும் என்றாள் அன்னை இதைக் கண்டதும் கேட்டதும் ஆக்னஸ் வியப்பில் ஆழ்ந்தாள் அன்னை தனக்கு சொல்லவந்த பாடம் புரிந்து கொண்டாள்.

### புறம் கூறா அறம்

**"அறம் கூறான் அல்ல செயினும் ஒருவன்**
**புறம் கூறான் என்றல் இனிது"**

**குறள் 181**

ஒருவன் அறம் என்பதையே அறியாதவனாக அறம் அல்லாத காரியங்களைச் செய்கின்றவனாக இருந்தாலும், அவன் மற்றவர்களைப் பற்றி கோள் சொல்ல மாட்டான் என்பது சிறப்புடையது என்ற குறள் மூலம் வள்ளுவர் புறங்கூறும் செயல் அறத்திற்கு மாறான செயலாக கூறுகிறார்.

இதே போன்ற கருத்தை தெரேசா காவியத்தில் சொல்லப்பட்ட மற்றொரு வாழ்க்கைப் பாடத்தைக் காணலாம். ஒரு நாள் ஆக்னஸ் வீட்டில் அமர்ந்து கொண்டு தன் தோழிகளோடு பேசிக் கொண்டிருந்தாள். அப்போது ஒரு தோழி அங்கில்லாத ஒருத்தியைப் பற்றி அவதூறாக பேசிக் கொண்டிருந்தார்கள். ஆக்னஸின் தாய் சென்று அவர்கள் பேசிக் கொண்டிருந்த அறையில் எரிந்து கொண்டிருந்த விளக்கை அணைத்தால், ஆக்னஸ் வியந்தாள்? அம்மா ஏன் விளக்கை அணைத்தீர்கள்? அதற்கு என்ன அவசியம் என்று தன் தாயிடம் வினவினால். அதற்கு அன்னை புறம்பேசும் இடத்தில் வெளிச்சம் எதற்கு குருட்டுச் செயல்களுக்கு இருட்டே வெளிச்சம் என்று

தாய் கூறினால். ஆக்னஸின் தூய நெஞ்சம் நொந்தது. ஆக்னஸ் தன்வாழ்வில் மேலும் ஒரு அறச்செயலை பாடமாகக் கற்றுக் கொண்டாள்.

**தெரேசாவின் அறவாழ்வு**

பதினோறாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆக்னஸ் டிசம்பர் 01-1928 இந்தியாவை நோக்கிய புதிய பயணம் தொடங்கினார். ஜனவரி 6 -1929ல் கொல்கத்தாவுக்குள் கால் பதித்தார்.

**"தெராசாவின் விளங்காத கேள்விகளுக்கு**
**விடையாக உள்ளத்தில்**
**இயேசு விளக்கோடு நின்றிருந்தார்"**

இறை நம்பிக்கையில் இணைந்து நம்பிக்கை எல்லாம் இறைனில் வைத்தாள்.

வாழ்வின் பணி செய்வோர் மத்தியில் தானும் சேவை செய்வதை தன் வாழ்வாய் கொண்டிருந்தாள். தெரசா நோயாளிகளை சந்தித்து, அவர்கள் கதைகளைக் கேட்டு அனைவருக்கும் ஆறுதல் அளிக்க விரும்பினால். கொல்கொத்தா கன்னியர் இல்லத்தில் இருந்து கொண்டு பணியாற்ற அவளுக்குப் பிடிக்கவில்லை. மேலும் உனக்கான பணி இதுவல்ல வா வெளியே என்ற வார்த்தை அவளுக்குள் ஒளிக்கத் தொடங்கிவிட்டது. தனக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் சேரிகளில் சுற்றி ஏழைகளைச் சந்திந்தாள். கண்ணியாஸ்திரியாய் இருந்து கொண்டு வாழ்வில் பல மாற்றங்கள் பணி மாற்றங்கள் நடந்தாலும் அவளுடைய ஆழ்மனத்திற்குள்

**போ உன்பணி அறைகளில் அல்ல**
**அறைகளே இல்லாமல்**
**தெருக்களில் அலைபவர்களுக்காக**

என்ற வார்த்தை அவளுக்குள் ஒலித்துக் கொண்டே இருந்தது. தெரசா முடிவெடுத்தாள் தன் காலைஎடுத்து சாலையில் வைக்க

**"ஒத்துக் கொள்கிறேன் ஆண்டவரே - என்னை**
**ஒடுக்கப்பட்டோருக்காய் ஒப்படைக்கிறேன்"**

என்று குரலுயர்த்தி ஆண்டவரிடம் சொல்லி இந்த சேவையை இன்பமாக ஏற்றுக் கொண்டாள்.

**"தோன்றின் புகழோடு தோன்றுக அஃதுஇலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று"**

**குறள் 236**

என்ற வள்ளுவரின் வார்த்தைக்கேற்ப தன் வாழ்வை அர்த்தமுள்ள வாழ்வாக வாழத் தொடங்கினாள்.

**ஈகை அறம்**

ஆக்னஸின் தந்தையும், தாயும் ஏழைகள் தங்கள் வாசல் தேடி வரும்வரை காத்திருப்பதில்லை. அவர்களின் வீடு தேடிச் சென்று அவர்களுக்கு கொடுப்பதை தன் வழக்கமாக்கிக் கொண்டார்கள். இதே கருத்தை சங்க இலக்கியத்திலும் சொல்லப் பட்டிருக்கின்றது.

**"அடுத்தவர்களுக்குக் கொடுப்பது தான்**
**கொடை அறம் என்கிறது" புறநானூறு**
**"மற்றவர்களுக்குக் கொடுப்பதற்குப் பொருள்**
**இல்லை என்றாலும்**
**கொடுக்கும் மனம் உடைய**
**"பிடவுர்க்கிழார் மகன் பெருஞ்சாத்தன்**
**என்று பாராட்டுகிறார் நக்கீரர்.**

சங்க காலத்தில் வாழ்ந்த மன்னன் ஒருவனின் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்வை புலவர் எவ்வாறு எடுத்துரைக்கிறார். இரவலர் வராவிட்டாலும் அவர்களைத் தேடி வரவழைத்தல் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின் இயல்பு என்கிறார் நச்செள்ளையார்

**வாரார் ஆயினும் இரவலர் வேண்டித்**
**தேரில் தந்து அவர்க்கு ஆர்பதம் நல்கும்**
**நகைச்சொல் வாய்மொழி இசைசால் தோன்றல்"**

**(6 பதிற்றுப்பத்து)**

என்றப் பாடல் சங்க இலக்கியத்தின் எட்டுத் தொகைநூல்களில்ஒன்றாகியபதிற்றுப்பத்து நூலில் சொல்லப்பட்டுள்ளது.

**"இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய**
**தாமே தமியர் உணல்" குறள் - 229**

என்ற குறளில் வள்ளுவர் எவருக்கும் எதையும் கொடுக்க மனமில்லாமல் வாழ்ந்த ஒருவன் இறந்து விட்டாலும், அந்த குணமுடையவன் இறந்த செய்தி கூட கேட்பவர்களுக்கு இன்பத்தை உண்டாக்கும் என்கிறார் வள்ளுவர்.

***அர்பண வாழ்வு***

> ***"தெரசாவின் விளங்காத கேள்விகளுக்கு விடையாக உள்ளத்தில்***
> ***இயேசு விளக்கோடு நின்றிருந்தார்"***
> ***"தெரசாவின் பணிகள் புன்னகையில் துவங்கி புன்னைகையில் முடிந்தன".***

அன்னை தெரேசா தான் தொடங்கி பணிக்கு "மிஷனரிஸ் ஆப் சாரிடி" என்று பெயரிட்டார். 1950ஆம் ஆண்டு தெரசாவின் தெருச்சபைக்கு திருச்சபை அங்கிகாரம் தரப்பட்டது. அதன் பிறகு தெரேசா தன் வாழ்நாளை ஆதரவற்றவர்களுக்காய் அர்ப்பணித்து உலக மக்களின் மனதில் அன்னையாய் திகழ்ந்தார். ஆனாலும் தன் வாழ்வில் இயேசுவின் வாழ்வும் உயிர்ப்பும் சொன்ன வாழ்வியல் பாடுகளை தன் வாழ்க்கையாகவே எடுத்துக் கொண்டு வாழ்ந்தவர். தன் வாழ்வில் சந்திக்காத தோல்விகள், நிராகரிப்புகள் இவற்றையெல்லாம் எண்ணி கரங்களை சுருக்கிக் கொள்ளாதீர்கள் நீட்டுங்கள். ஏழையின் விரலுக்கு எட்டும் வரை என்று இயேசுவின் வார்த்தைகளை

> ***"தூய இதயம் உள்ளவரே பாக்கியவான்கள்"***

நல்ல செயல்கள் நடைபெறும் இடங்களில் எல்லாம் எதிர்ப்புகள் எழுவது வழக்கம் என்பது அன்னையின் வாழ்வாள் உணர்த்தப் பட்டுள்ளது.

> ***"நற்செயல்கள் விளம்பரங்களுக்கானதால் விளம்பரங்களுக்காய்***
> ***வெளி வருவது நற்செயலும் அல்ல"***

என்பது போல இந்த காலத்தில், எந்த ஒரு செயலைச் செய்தாலும் அதற்கு விளம்பரம் தேடிக் கொள்கிறார்கள். அது போல அல்லாமல் தன் வாழ்வை இறைவனுக்கு அர்ப்பணித்து தெருக்களில் குடியிருக்கும் சேரிமக்களுக்காக, தன் வாழ்வை அர்பணித்தாள்.

***முடிவுரை***

இந்தக் கட்டுரையானது "அன்னை தெரேசாவின் வாழ்வியல் அறம்" என்ற தலைப்பில் உருவான இந்த ஆய்வில் அன்னையின் வாழ்வில் சந்தித்த நிகழ்வுகளும், உண்மைச் சம்பவங்களும், அன்னையின் வாழ்க்கையை எடுத்துக்காட்டியுள்ளது.

தெரேசா தம் வாழ்வில் எப்படி வாழ்ந்தார். அவருடைய பெற்றோர்கள் அவளுக்குக் காட்டிய வழியில் தம் வாழ்வை செம்மைப் படுத்திக் கொண்டார் என்பதை தெராசாவின் தாயார் இரண்டு நிகழ்வுகளை பாடமாக எடுத்துக் காட்டியுள்ளார். ஒன்று எப்படிப் பட்ட நட்போடு வாழ வேண்டும். எப்படிப் பட்ட நட்பு வாழ்க்கைக்கு பயன்படாத நட்பு என்பதை மிகச் சிறப்பான ஒரு விளக்கத்துடன் விளங்க வைத்துள்ளார் என்பதையும், நண்பர்களுக்குள் புறம்பேசுதல் என்பது தவறான செயல் என்பதையும், அன்னை தெரேசா தன் வாழ்வில் தன்னிடம் ஒன்றும் இல்லையென்றாலும் பிறருக்காகவே வாழ்ந்தார் என்பதோடு சங்க இலக்கியங்களில் வாழ்ந்த மன்னர்களின் வாழ்க்கையோடு தொடர்பு படுத்தி மேற்கோள்களுடன் காட்டப்பட்டுள்ளது. தன்னிடம் உள்ள பொருட்களை மற்றவர்களுக்குக் கொடுத்து உதவி வாழ்வதை விட தன்னையே அர்ப்பணித்து வாழ்வது தான் அறவாழ்க்கை என்பதையும் இந்தக் கட்டுரையின் மூலம் விளக்கப்பட்டுள்ளது. வாழ்க்கையில் அறத் தோடு வாழ்வது சிறந்த வாழ்க்கைதான். ஆனால் தன் வாழ்க்கையையே அறமாகக் கொண்டு வாழ்ந்த தெரேசா1997ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5ம் நாள் இந்தக் கருணைக்கதிரவன் அணைந்து போனது மனிதராய் பிறந்து உலக மக்களுக்கு இனிய அன்னையாய் வாழ்ந்தவர். புனித அன்னை தெரேசாவானார் என்பதை இக்கட்டுரையின் மூலம் விளக்கப்பட்டுள்ளது.